2011 ஆகஸ்ட் 4] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

வலுப்படுத்துவதற்காக 2011-2012 ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்திற்கு 27.07 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பள்ளிக்குச் செல்லாமல் 56,113 சிறார்கள் உள்ளனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தீவிர முயற்சிகள்மூலம் இவர்கள் அனைவரையும் இந்த ஆண்டே பள்ளிகளில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பிற்பகல் 12-20

81. பள்ளிக் கல்வியில் ஆண், பெண் கல்வி விகிதாச்சாரத்தில் உள்ள இடைவெளியை சரி செய்வதற்கான வழிவகைகளை அரசு வகுத்து வருகிறது. 2011 ஆம் ஆண்டு மக்கட்தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் கல்வி கற்றோர் விகிதாச்சாரம் 80.33 விழுக்காடாக உள்ளது. இதில் ஆண்களின் கல்வி விழுக்காடு 86.81 ஆகவும் பெண்களின் கல்வி விழுக்காடு 73.86 ஆகவும் உள்ளது. பெண்களுக்கான தேசிய தொடக்கக் கல்வித் திட்டம் 11 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கியுள்ள 38 வட்டாரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தங்கிப் பயிலக்கூடிய வகையில் இடைநிலைக் கல்வியை வழங்கும் கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா திட்டத்தில் 14 மாவட்டங்களில் உள்ள 45 வட்டாரங்களில் உறைவிடப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உயர்நிலை, மேனிலைக் கல்வி பயிலும் மாணவியருக்கு உண்டி-உறைவிட வசதி செய்து தருவதற்காக 13 மாவட்டங்களில் உள்ள 44 வட்டாரங்களில் 44 மாணவியர் தங்கும் விடுதிகள் தொடங்கப்பட்டுள்ளன. பெண்களுக்கு தொடக்கக் கல்வி வழங்கும் தேசியத் திட்டம், கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா, மாணவியர் தங்கும் விடுதிகள் ஆகிய திட்டங்களின்மூலம் 2,58,715 மாணவியர் பயனடைகின்றனர். பெண் கல்வியை ஊக்குவிக்கும் நோக்குடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் பட்டப் படிப்பும், பட்டயப் படிப்பும் படித்த பெண்களுக்கான திருமண உதவித் தொகையை 25,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக உயர்த்தியதுடன், (மேசையைத் தட்டும் ஒலி) நான்கு கிராம் தங்கக் காசும் மனமுவந்து வழங்கியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பெற்றோர்கள் தங்கள் பெண் குழந்தைகளை ஆண் குழந்தைகளுக்கு நிகரான கல்வி புகட்ட ஊக்கமளிப்பதோடு கல்வி கற்பதில் விரைவில் பாலின சமநிலையை எட்டவும் இது உதவும் என நம்புகிறேன்.

82. தொடக்கக் கல்வி நிலையில் மாணவர் சேர்க்கை உயர்ந்து வருவதால் மேனிலைக் கல்வி நிலையிலும் மாணவர் சேர்க்கை உயர்ந்து வருகிறது. மேனிலைக் கல்வியின் தரத்தையும்,

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2011 ஆகஸ்ட் 4

உள்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்துவதற்காக, 2009-2010 ஆம் ஆண்டு முதல் தேசிய இடைநிலைக் கல்வித் திட்டம் (Rashtriya Madhyamik Shiksha Abhiyan) செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, இத்திட்டம், நடுநிலைப் பள்ளிகளை உயர் நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துவதையும் இடைநிலைக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்காக தற்போதுள்ள இடைநிலைப் பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 2011-2012 ஆம் ஆண்டில் 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2009-2010 ஆம் ஆண்டில் மேனிலைப் பள்ளிகளில் இடைநிற்றல் விகிதம் 1.39 விழுக்காடாக இருந்தது. மேனிலைப் பள்ளிகளிலிருந்து இடை நிற்றலை இன்னும் குறைப்பதற்குப் பத்தாம் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்புவரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் ஒரு சிறப்பு ஊக்கத் தொகை வழங்க முன்மொழிகு அம்மா அவர்களின் அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அரசுப் பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள் ஆகியவற்றில் பத்தாம் வகுப்பு, மேனிலை முதலாம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தலா 1,500 ரூபாயும், (மேசையைத் தட்டும் ஒலி) மேனிலை இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு தலா 2,000 ரூபாயும் ஊக்கத் தொகையாக மாநில அரசால் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகை மாணவ, மாணவியர்களின் பெயரில் மின்விசை நிதி நிறுவனம் போன்ற பொதுத் துறை நிதி நிறுவனங்களில் வைப்புத் தொகையாக வைப்பீடு செய்யப்பட்டு, அவர்கள் பள்ளிப் படிப்பை முடிக்கும்பொழுது அத்தொகை அவர்களுக்கு வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் 394.04 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் 24,94,649 மாணவ, மாணவியர் பயன்பெறுவார்கள். இத்திட்டத்தின்மூலம் மேனிலைப் பள்ளிகளில் இடைநிற்றல் விகிதம் மேலும் குறையும் என நம்புகிறேன்.

83. 2011-2012 ஆம் ஆண்டில் பள்ளிக் குழந்தைகளுக்கு இரண்டு செட் சீருடைகள் வழங்கப்படும். இதற்கு கூடுதலாக 59 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் உறுதியளித்தபடி 2012-2013 ஆம் ஆண்டு முதல் பள்ளிக் குழந்தைகளுக்கு நான்கு செட் சீருடைகள் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கு ஆண்டிற்கு 177 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும். ஆறாம் வகுப்பும் அதற்கு மேலும் பயிலும் மாணவர்களுக்கு அரைக் காற்சட்டைக்குப் பதிலாக முழுக் காற்சட்டையும்,